# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.234/2019

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on .2026 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவண்ணன் | Father's Name | : வெங்கடாஜலம் |
| Village | : | Taluk | : |
| Calling | : | Age | : |

துவக்க நேரம் :12.18 P.M.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் பிறந்தது, வளர்ந்தது, எனது பூர்விகமும் ஆரியபாளையம் கிராமம் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் ராமசாமி படையாட்சி என்றால் சரிதான். எனது தாத்தாவுடன் பிறந்த சகோதரர்கள் யார் யார் என்றால் மூக்க படையாட்சி, கிருஷ்ண படையாட்சி, பொன்னுசாமி படையாட்சி, அழகப்படையாட்சி ஆகியோர்கள் ஆவார்கள். எனது தாத்தா உள்ளிட்ட மேற்கண்ட நபர்கள் அனைவரும் மெய்க்கப்படையாட்சியின் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. நான் குடியிருந்து வரும் கிராம நத்தம் குடியிருப்பு பகுதி மற்றும் விவசாய நிலங்கள் அனைத்தையும் மேற்கண்ட 5 நபர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். ஆரம்ப காலத்தில் என் தாத்தா மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் கூட்டாக பட்டா இருந்தது என்றால் சரிதான். எனது தாத்தா ராமசாமியின் ஒரே வாரிசு எனது தந்தை என்றாலும், அவருக்கு நானும் என்னுடன் பிறந்த மாசிலாமணி, மணிவண்ணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வாதி எனது தாத்தாவுடன் பிறந்த

அழகப்படையாட்சியின் மருமகள் என்றால் சரிதான்.

3. இவ்வழக்கின் 5-ஆம் பிரதிவாதி மணி எனது தாத்தாவுடன் பிறந்த சகோதரர் மூக்கப்படையாட்சியின் மகன் மருதமுத்துவின் மகன் என்றால் சரிதான். கிருஷ்ணப்படையாட்சியின் மனைவி பெயர் என்ன என்றால் தெய்வாணை ஆகும். தாவா சொத்து உள்ள இடத்தில் எனது 5 தாத்தாக்களுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணன் எனது தாத்தாவுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனவே கிருஷ்ணனுக்கும் மேற்படி இடத்தில் பாகம் உள்ளது என்றால் சரிதான்.

4. பொன்னுசாமி, அழகப்படையாட்சி இருவரும் தங்களது பாகத்தை கிருஷ்ணன் மனைவி தெய்வாணைக்கு கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 07.10.1957 மேற்கண்ட கிரயம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மேற்கண்ட கிரய ஆவணம் என்றால் ஆவணத்தில் அவ்வாறுதான் கண்டுள்ளது. கடந்த 15.02.1978-ல் மேற்படி கிருஷ்ணன், தெய்வாணை மற்றும் அவர்களது மகன் கோவிந்தன் ஆகியோர்கள் தெய்வாணை கிரயம் பெற்ற சொத்தை சுசீலாவிற்கு விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான்.

5. தாவா சொத்திற்கு வடபுறத்திலும், தெற்குபுறத்திலும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றாலும், தாவா இடமானது புழக்கடையாக மேற்கண்ட 5 குடும்பங்களும் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடந்த 10.10.1986 தேதியிட்ட கிரய ஆவணத்தின் மூலம் ஒரு மூக்கப்படையாட்சி மற்றும் ஜெகநாதன் ஆகியோர்களுக்கு எனது தாத்தா, எனது தந்தை மற்றும் எனது சகோதரரும் நானும் சேர்ந்து கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தில் எனது தாத்தா ராமசாமிக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 1/5 பாகம் என குறிப்பிட்டு கிரயம்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணம் **<u>வா.சா.ஆ.9</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதி சுசீலாவிற்கு, கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட 1/5 பாகமும், அவர் மனைவி தெய்வாணை கிரயம் பெற்ற 2/5 பாகமும் சேர்த்து மொத்தம் 3/5 பாகம் வா.சா.ஆ.1-ன் மூலம் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில்தான் அவரவர் பாகத்தை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எங்களுக்கு பாத்தியப்பட்ட பாகம் தாவா சொத்தான புழக்கடைக்கு தென்புறத்தில் மேற்கு ஓரமாக அமைந்துள்ளது என்றால் சரிதான்.

7. தாவா சொத்தின் ச.எண். 163/3 என்றால் சரிதான். அதன் பழைய ச.எண். 51/1 என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா மற்றும் அவரது உடன்பிறந்த சகோதரர்கள் ஆகிய 5 நபர்களுக்கும் பாத்தியமானது என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் 812 ½ சதுரடி என வா.சா.ஆ.4-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை நானும், எனது தந்தை மற்றும் எனது சகோதரர்கள் சேர்ந்து 4-ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான்.

8. நாங்கள் விற்பனை செய்யும் வரை தாவா சொத்தை அனைவரும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே எங்களுக்குண்டான 1/5 பாகத்தை பிரித்துக் கொடுத்துவிட்டார்கள். எங்களுக்கு தாவா சொத்தில் 1/5 பாகம் மட்டும் பாத்தியப்பட்டுள்ள நிலையில் நாங்கள் கிரயம் கொடுத்துள்ள ஆவணத்தில் 1/3 பாகம் கிரயம் கொடுப்பதாக கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு தாவா சொத்து அவ்வாறு 1/3 பாகம் எழுதிக் கொடுத்தது தவறு என்றும், அதனால் அந்த ஆவணம் செல்லாது எனவும், வாதி தனது பாகத்தை கேட்டும்

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

9. நாங்கள் கிரயம் கொடுத்த ஆவணத்தில் 1/5 பாகம் என்பதற்கு பதிலாக 1/3 பாகம் என எழுதிக் கொண்டதாலும், வாதி சுசீலாவிற்கு தாவா சொத்தில் 3/5 பாகம் பாத்தியப்பட்டது என்றாலும், எனவே மேற்படி பாகத்தை வாதியிடம் ஒப்படைக்க பிரதிவாதிகளாகிய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆன பட்டாவில் 1-ஆம் பிரதிவாதி, 5-ஆம் பிரதிவாதியின் தந்தை மற்றும் வாதி ஆகியோர்களின் பெயர்கள் உள்ளதால் 1/3 பாகம் என நாங்கள் கிரயம் கொடுத்த ஆவணத்தில் தவறாக எழுதிக் கொண்டோம் என்றாலும், வாதிக்கு 3/5 பாகம் பாத்தியமுள்ளதை மறைத்து அவ்வாறு கிரயம் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. எனவே தாவா சொத்தில் வாதி சுசீலாவிற்கு 3/5 பாகம் உரிமை உள்ளது என்றாலும், அதை அவரிடம் ஒப்படைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட குறுக்கு விசாரணையானது 5-ஆம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்வதாகவும், 4-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 12.48 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.234/2019, Dt.19.02.2026.